பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
18 04 2026 SATURDAY 7 15 PM

ஆகாஷவாணி
(Tune)
செய்திகள் -

தலைப்புச் செய்திகள்

1. கப்பல்களுக்கு காப்பீடு வழங்குவதற்கு 12 ஆயிரத்து தொள்ளாயிரத்து 80 கோடி ரூபாய் உத்தரவாதத்துடன் பாரத் கடல்சார் காப்பீட்டு நிதியத்தை தொடங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமாக அமைந்திருந்ததாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

3. மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்குச்சாவடியையொட்டி, லஷ்மண ரேகை எல்லைக்கோடு அமைத்து, வாக்காளர்கள் சரிபார்க்கப்படுவார்கள் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

4. Hormuz நீரிணை மீண்டும் மூடப்பட்டு தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக ஈரான் கூறியுள்ளது.

5. ஐ.பிஎல் கிரிக்கெட் போட்டியில், ஹைதராபாத் - சென்னை அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

i. இனி விரிவான செய்திகள் - -

>>>>> <<<<<

கடல் பயணத்தின்போது தாக்குதலால் பாதிக்கப்படும் கப்பல்களுக்கு காப்பீடு வழங்குவதற்கான பாரத் கடல்சார் காப்பீட்டு நிதியத்தை 12 ஆயிரத்து தொள்ளாயிரத்து 80 கோடி ரூபாய் உத்தரவாதத்துடன் தொடங்குவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்திற்குபின் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், எந்தவொரு சர்வதேச துறைமுகத்தில் இருந்தும் இந்தியாவுக்கு சரக்குகளை ஏற்றிவரும் கப்பல்களுக்கு காப்பீடு வழங்குவதற்கான உத்தரவாதத்தை அளிக்கும் நோக்கில் இந்த நிதியம் அமைக்கப்படுவதாக தெரிவித்தார்.

இதேபோன்று, இந்தியாவிலிருந்து பிற நாடுகளுக்கு சரக்குகளை ஏற்றிசெல்லும் கப்பல்கள் தாக்குதல் பாதிப்புக்கு உள்ளானால், இந்த நிதியத்தில் இருந்து காப்பீடு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கப்பலின் பாகங்களுக்கோ, இயந்திரங்களுக்கோ, அவை ஏற்றிச்செல்லும் சரக்குகளுக்கோ பாதிப்பு ஏற்படும்பட்சத்தில், இந்த இழப்பீடு வழங்கப்படும்.

போர் சூழலால் ஏற்படும் பாதிப்புகளுக்கு காப்பீடு பெறுவதற்கு இந்த நிதியம் வகை செய்கிறது என்றும் அவர் கூறினார்.

உள்நாட்டில் காப்பீடு செய்யப்பட்டிருக்கும் கப்பல்களுக்கு அசாதாரண சூழ்நிலையால் ஏற்படும் பாதிப்புகளுக்கு விரைந்து காப்பீடு பெறுவதற்கு இந்த நிதியம் உதவிடும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>> <<<<<

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமாக அமைந்திருந்ததாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பட்ஜெட் கூட்டத்தொடரில் முக்கிய மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டதாக கூறினார்.

இந்த கூட்டத்தொடரின் இரண்டாவது அமர்வில் மேற்காசிய போர் சூழல் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் தெரிவித்தார்.

மகளிர் இடஒதுக்கீடு மசோதா உட்பட மூன்று மசோதாக்களை நிறைவேற்றும் நோக்கில் நாடாளுமன்ற பட்ஜெட் சிறப்புக் கூட்டத்தொடர் மூன்று நாட்கள் நீட்டிக்கப்பட்டதாகவும் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.

>>>>> <<<<<

Hormuz நீரிணை மீண்டும் மூடப்பட்டு தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக ஈரான் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, ஈரானின் கூட்டு ராணுவ தலைமை வெளியிட்டுள்ள செய்தியில், ஈரானின் துறைமுகங்கள் மற்றும் கப்பல்களை அமெரிக்கப் படைகள் முற்றுகையிடுவதை

*கருத்தில்கொண்டு இந்த நீரிணையை மூட முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*Hormuz நீரிணை தங்களது முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், தங்களது ராணுவப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதனிடையே, அமெரிக்க மத்திய ராணுவப் படைப்பிரிவு விடுத்துள்ள செய்தியில், ஈரானிய துறைமுகங்கள் மற்றும் அந்நாட்டின் 23 கப்பல்களை அமெரிக்க கடற்படையினர் சுற்றிவளைத்துள்ளதாக தெரிவித்துள்ளது.*

*பிரிட்டன் ராணுவம் வெளியிட்டுள்ள செய்தியில், Hormuz நீரிணையை தங்கள் நாட்டு டேங்கர் கப்பல் கடந்து வந்தபோது ஈரானின் புரட்சிப்படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக தெரிவித்துள்ளது.*

*இருப்பினும், தங்களது கப்பலும், மாலுமிகளும் பாதுகாப்பாக உள்ளதாகவும் கூறியுள்ளது.*

*அந்த கப்பல் குறித்த எந்த தகவலையும் பிரிட்டன் வெளியிடவில்லை.*

*>>>>> <<<<<*

*18 04 2026 7 15 தேர்தல் களம் - செங்கல்பட்டு*

*இனி தேர்தல் களம்...*

*(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)*

*தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது செங்கல்பட்டு மாவட்டத்துக்கு உட்பட்ட தொகுதிகள்.*

*(வாய்ஸ் பைட் - தொகுப்பு – 206 செகண்ட்ஸ்)*

*>>>>> <<<<<*

*மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலில் ஒவ்வொரு வாக்குச்சாவடியையொட்டி, 100 மீட்டர் சுற்றுவட்டத்தில் லஷ்மண ரேகை எல்லைக்கோடு அமைக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.*

*வாக்குப்பதிவு நாளன்று சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடியை சேர்ந்த பட்டியலில் உள்ள வாக்காளர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*பாதுகாப்பு காரணம் கருதி, பல அடுக்கு வாக்காளர் சரிபார்ப்பை மேற்கொள்வதற்கு வசதியாக இந்த திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.*

*ஒரு வாக்குச்சாவடி அலுவலரும், அரசு அதிகாரியும் முதல் சுற்றில் ஆவணங்களை சரிபார்ப்பார்கள் என்றும், அதன் பின்னரே எல்லையை கடந்து அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*எல்லையை கடந்தபின் அவர்களின் அடையாள ஆவணங்கள் சரிபார்க்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இரண்டு அடுக்கு சரிபார்ப்புப் பணியின்மூலம் தகுதியான வாக்காளர் மட்டுமே வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களிப்பது உறுதி செய்யப்படும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.*

*>>>>> <<<<<*

*மேற்குவங்க மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரம் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.*

*பிஜேபி-யின் மூத்த தலைவர்கள் மாநிலத்தின் பல பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.*

*சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு சுவேந்து அதிகாரி, மேதினிப்பூர் மாவட்டத்தில் நந்திகிராம் உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார்.*

*அக்கட்சியின் திரு திலிப்கோஷ், காரக்பூரில் பிரச்சாரம் மேற்கொண்டார்.*

*மேற்குவங்க மாநிலம் ஊழல் மற்றும் முறையற்ற நிர்வாகத்தால் பாதிக்கப்பட்டிருப்பதற்கு ஆளும் திரிணமுல் காங்கிரஸ் கட்சியை குற்றம் சாட்டி அவர்கள் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.*

*உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத், அஸ்ஸாம் முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா ஆகியோர் மாநிலத்தின் பல பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டனர்.*

*மத்தியப்பிரதேச முதலமைச்சர் திரு மோகன் யாதவ், வடக்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் பிரச்சாரம் மேற்கொண்டபோது, திரிணமுல் காங்கிரஸ் அரசின், சீரற்ற நிர்வாகம் காரணமாக பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ளதாக குற்றம் சாட்டினார்.*

*மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி, இந்த தேர்தலில் பிஜேபி தோல்வியை சந்திக்கும் என்று கூறினார்.*

*மகளிர் இடஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை உள்ளிட்ட மசோதாக்கள் நேற்று மக்களவையில் தோற்கடிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*திரிணமுல் காங்கிரஸின் மற்றொரு மூத்த தலைவர் திரு அபிஷேக் பானர்ஜி, முர்ஷிதாபாதில் வாக்கு சேகரிக்கையில், மேற்குவங்க நலனுக்கு எதிராக பிஜேபி செயல்படுவதாக குற்றம் சாட்டினார்.*

*காங்கிரஸ் மூத்த தலைவரும், தெலங்கானா அமைச்சருமான திரு முகமத் அசாருதின், மால்டா மாவட்டத்தில் பிரச்சாரம் மேற்கொண்டார்*

*இடதுசாரி உள்ளிட்ட மற்ற அரசியல் கட்சிகளும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.*

*>>>>> <<<<<*

***விளையாட்டுச் செய்திகள்***

*ஐ.பிஎல் கிரிக்கெட் போட்டியில், ஹைதராபாத் அணி இன்று சென்னை அணியை எதிர்கொள்கிறது.*

*ஹைதராபாதில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற சென்னை அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.*

*>>>>>END<<<<<*